DEPOSITION OF WITNESS
IN THE I ADDITIONAL DISTRICT COURT (PCR),
TIRUCHIRAPPALLI.
**Spl.S.C.No.13/2025**
**P.W.8**

| | | |
|---|---|---|
| Name | : | டாக்டர்.திரு.மகாலிங்கம் |
| Father's Name | : | திரு.நாகரத்தினம் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(Accused is present)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 06th day of November 2025.

**முதல் விசாரணை**

நான் தற்போது மணப்பாறை சிந்துஜா மருத்துவமனையில் மருத்துவ அலுவலராக பணிபுரிகிறேன். கடந்த 01.11.2024 அன்று இரவு 10.30 மணிக்கு நான் எங்கள் மருத்துவமனையில் பணியில் இருந்தபோது தமிழ்செல்வன் என்பவரை அவரது சகோதரி அம்பிகா என்பவர் மருத்துவமனைக்கு அழைத்து வந்தார். அவரை உசிலை ஊரணி என்ற ஊரின் அருகில் வைத்து ஐந்து அடையாளம் தெரியாத நபர்கள் கத்தி மற்றும் வண்டி சாவியால் அன்று இரவு 9.30 மணிக்கு தாக்கியதாக கூறினார். எங்கள் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வருவதற்கு முன்பாக அவர் மணப்பாறை அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்து விட்டு வந்திருந்தார். அவரது இடது தோளில் மற்றும் முதுகில் வலது கன்னத்தில் தையல் போடப்பட்ட காயங்கள் காணப்பட்டது. அவருக்கு மூச்சு விடுவதில் சிரமம் இருப்பதாகச் சொன்னார். அவருக்கு சி.டி. ஸ்கேன் எடுத்து

Verdictum

பார்க்கப்பட்டபோது விலா எலும்புகள் உடைந்து இருந்தது கண்டறியப்பட்டது. மேலும் நுரையீரல் உறையில் ரத்தக்கசிவு இருந்தது கண்டறியப்பட்டது. ஆகவே அவருக்கு ஏற்பட்ட காயங்கள் கொடுங்காயங்கள் என்று சான்று வழங்கினேன். நான் வழங்கிய விபத்து பதிவேடு **அ.த.சா.ஆ.9** ஆகும். காயச்சான்று **அ.த.சா.ஆ.10** ஆகும். என்னிடம் காட்டப்படும் கத்தி போன்ற ஆயுதத்தால் அந்த நபர் தாக்கப்படும் போது அவருக்கு ஏற்பட்ட காயங்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு. காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

<u>**குறுக்கு விசாரணை**</u>

காவல்துணை கண்காணிப்பாளர் என விசாரித்த போதும் நான் தற்போது முதல் விசாரணை சாட்சியத்தில் கூறிய சங்கதிகள் தான் சொன்னேன். காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்த போது குமார் சலூன் கடை முன்பு சம்பவம் நடந்ததாகவும், அந்த நபர் தன்னை அடையாளம் தெரிந்த ஒரு நபர் தன்னைக் கத்தியை கொண்டு தாக்கியதாகவும் கூறவில்லை. காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்த போது கத்தியை காண்பித்து விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். என்னிடம் அந்த நபர் சிகிச்சைக்கு வந்த போது மணப்பாறை அரசு மருத்துவமனை விபத்து பதிவேடு நகல் எதுவும் கொண்டு வரவில்லை. நான் அந்த நபரை பரிசோதனை செய்தபோது அவருக்கு தையல் இடப்பட்ட காயங்கள் இருந்தது என்று தான் குறிப்பிட்டு இருக்கிறேன். அந்தக் காயங்கள் தையல் இடப்பட்டு இருந்த காரணத்தினால் அதன் நீளம், ஆழம், அகலம் என்னால் குறிப்பிட்டு கூற இயலாது. நான் அந்த நபருக்கு எடுத்த சிடி ஸ்கேனை போலீசார் என்னிடம் இருந்து வாங்கிக் கொள்ளவில்லை. அவருக்கு விலா எலும்பு உடைந்திருந்த காரணத்தினால் அவருக்கு

ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று சான்றளித்தேன். ஒரு நபர் அழுத்தம் காரணமாக கீழே விழுந்தால் விலா எலும்பு உடைவதற்கான வாய்ப்பு உண்டு. அந்த நபருக்கு மூச்சு விடுவதில் சிரமம் ஏற்பட்டதாக கூறுவதை நான் மருத்துவ ரீதியாக உறுதி செய்யவில்லை. தனக்கு மூச்சு விடுவதில் சிரமமாக இருக்கிறது என்று அந்த நபர் பொய்யாக கூறியிருக்கலாம்.

**<u>மறுவிசாரணை</u> – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

(ஒம்.).XXXX,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

Adeeb Apex

apex app

DEPOSITION OF WITNESS
IN THE I ADDITIONAL DISTRICT COURT (PCR),
TIRUCHIRAPPALLI.

**Spl.S.C.No.13/2025**

**P.W.9**

| | | |
|---|---|---|
| Name | : | திரு. மு.செல்வம் |
| Father's Name | : | திரு.முனியாண்டி |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 48 |

(Accused is present)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 06th day of November 2025.

**முதல் விசாரணை**

நான் தற்போது மணப்பாறை வட்டாட்சியர் அலுவலகத்தில் சமூக பாதுகாப்பு திட்ட தனி வட்டாட்சியராக பணியில் இருக்கிறேன். இதற்கு முன்பு மணப்பாறை வட்டாட்சியராக பணியில் இருந்த போது மணப்பாறை உட்கோட்ட காவல்துறை கண்காணிப்பாளர் வேண்டுகோளுக்கு இணங்க இந்த வழக்கின் நிகழ்நிலை புகார்தாரர் ஆகிய தமிழ்செல்வன், த/பெ.ராஜகோபால் மற்றும் எதிரி பழனிவேல், த/பெ.செல்வம் ஆகியோர்களின் சாதி குறித்து வருவாய் ஆய்வாளர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர்கள் அளித்த அறிக்கையின்படி சான்று வழங்கினேன். இந்த வழக்கில் கண்ட நிகழ்நிலை புகார்தாரர் தமிழ்செல்வன், த/பெ.ராஜகோபால் என்பவர் இந்து பறையன் எனப்படும் பட்டியல் வகுப்பைச் சார்ந்தவர் என்றும் எதிரி பழனிவேல், த/பெ.செல்வம் என்பவர் இந்து ஊராளி கவுண்டர் எனப்படும் DNC வகுப்பைச் சார்ந்தவர் என்றும் சாதி சான்றிதழ் வழங்கினேன். நான் வழங்கிய சாதி சான்றிதழ் மெய்தன்மை சான்று **அ.த.சா.ஆ.11** ஆகும். காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

மேற்படி சான்றிதழ் பண்ணப்பட்டி பகுதி வருவாய் ஆய்வாளர் அறிக்கையின் அடிப்படையில் வழங்கினேன் என்று சொன்னால் சரிதான். காவல்துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்த போதும் நான் இவ்வாறு தான் சொன்னேன். மணப்பாறை பகுதி வருவாய் ஆய்வாளர் அறிக்கையின் அடிப்படையில் வழங்கியதாக சொல்லப்பட்டு இருந்தால் அது தவறானது ஆகும்.

**<u>மறுவிசாரணை</u> – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

(ஒம்.).XXXX,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.